**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**S.C. NO.43/2020**

**10.11.2022 - அ.சா. 1 அமுதா மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

24.4.2018ல் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுக்கும் போது மதிய நேரத்திற்கு பிறகு கொடுத்தேன். சுமார் மாலை 4 மணி இருக்கும். என்னுடன் என் ஊர் ஆட்களும் சுமார் 20 பேர் வந்திருந்தார்கள். நாங்கள் அனைவரும் சேர்ந்து வெட்டியவர் யார் என்று கண்டுபிடித்து கைது செய்ய வேண்டும் என்று கூறினோமா என்றால் சரிதான். ஆஜர் எதிரியை போலீசார் அழைத்து வந்தார்களா என்றால் ஆம். என் எதிரே போலீசார் எதிரியை விசாரித்தார்கள் என்று சொன்னால் சரிதான். ஆரம்பத்தில் அவர் கொலையை அவர் செய்யவில்லை என்று கூறினாரா என்றால் ஆம். போலீசார் அடித்து, மிரட்டி கேட்டபிறகும் எதிரி ஒப்புக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் புகார் கொடுத்த பிறகு எதிரியை போலீசார் அடைத்து வைத்து விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். நான் கொடுத்த புகாரை யார் எழுதினார்கள் என்று தெரியாது. அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று எனக்கு தெரியாது. புகார் கொடுத்த பிறகு அன்று இரவு முழுவதும் காவல் நிலையத்தில் இருந்தோம் என்றால் சரிதான். போலீசார் பைப் மற்றும் கொடுவாளை என்னிடம் காண்பித்தார்கள். நான் புகார் கொடுப்பதற்கு முன்பு போலீசார் என்னை விசாரித்ததோடு சரி அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எங்கள் நிலத்தில் இருந்த பாறையை வீடு கட்டுவதற்காக நாங்கள் உடைத்தோம் என்று சொன்னால் சரிதான். பாறை உடைக்கும் வேலை சுமார் 1 மாத காலமாக எங்கள் நிலத்தில் நடந்து கொண்டு இருந்தது. அந்த வேலையின் காரணமாக பகல் மற்றும் இரவு நேரங்களில் வித்தியாசம் பார்க்காமல் சென்று நிலத்தை பார்த்து வருவார் என்றால் சரிதான். இறந்த அன்றும், நிலத்திற்கு சென்றார். அவர் எப்போது எல்லாம் நிலத்திற்கு போவாரோ சாப்பாடு நேரம் தவறிவிட்டால் நான் சாப்பாடு எடுத்துக் கொண்டு நிலத்திற்கு செல்வேன். இறந்த அன்றும் நான் சாப்பாடு எடுத்து சென்றேன். நான் சாப்பாடு எடுத்து செல்லும் போது நேரம் காலை 7 மணி. என் கணவரை வெட்டும் போது யார் யார் பார்த்தார்கள் என்ற விவரம் தெரியும். என்னுடைய புகாரில் சம்பவத்தை யார் யார் பார்த்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். புகாரில் என் கணவரை எதிரி பைப்பால் பின்னந்தலையில் அடித்தார் என்று சொல்லியுள்ளேன். அந்த பைப்பைதான் நான் போலீசாரிடம் அடையாளம் காட்டினேனா என்றால் சரிதான். என்

கணவருக்கு பின்னந்தலையில் காயம் இருந்தது. நான் கொடுத்த புகாரில் எதிரி என் கணவரை பைப்பால் பின்னந்தலையில் அடித்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் கணவர் தடுமாறி கீழே விழுந்து விட்டார், நான் சத்தம் போட்டேன் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தை புகாரிலும் சொல்லியுள்ளேன். நான் மறுபடியும் சத்தம் போட்டபோது எதிரி ஓடிவிட்டார் என்று புகாரில் சொல்லவில்லை. நான் கணவரை இறந்து கிடக்கும் போது பார்த்தேனா என்றால், என் கணவர் முன்னால் சென்று கொண்டிருந்தார், நான் பின்னால் சென்று கொண்டிருந்தேன். இறந்து கிடந்தவரை நான் தூக்கிப் பார்தேனா என்றால் கையை வைக்காதீர்கள் என்று கூறிவிட்டார்கள். அதனால் என் கணவரை நான் தொட்டு பார்த்து எங்கெல்லாம் காயம் உள்ளது என்று தெரிந்துகொள்ளவில்லை. யார் தொடவேண்டாம் என்று கூறினார்கள் என்றால், யார் வெட்டினது தெரியாமல் போய்விடும் அதனால் எடையே போய்விடு என்று கூறினார்கள். என் கணவரை எதிரி வெட்டியபோது நான் வெட்டாதே என்று கத்தியத்தியதற்கு எதிரி உன்னையும் வெட்டிவிடுவேன் தேவிடியா ஓடிவிடு என்று கூறினார் என்பதை என் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை. என்னுடைய போலீஸ் விசாரணையிலும் மேற்சொன்ன வாறு நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் கணவரை யார் வெட்டினார்கள் எனக்கு தெரியாது என்றும், பின்னிட்டு போலீசார் சொல்லியதின் பேரில் நான் புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், எனக்கும், என் கணவருக்கும் நில சம்மந்தமாக ஏற்கனவே தகராறு இருந்தது என்று சொன்னால் எதிரி எங்களிடம் ரூ. 6 லட்சம் கடன் வாங்கியிருந்ததை கொடுக்காததால் தகராறு இருந்தது. எதிரி பணம் வாங்கியதற்கு என் கணவர் பெயருக்கு கிரைய ஒப்பந்தம் ரூ. 6 லட்சத்திற்கு போட்டு இருந்தார். பின்னிட்டு எதிரி ரூ. 1 லட்சம் கடன் வாங்கிக்கொண்டு பத்திரம் எழுதி தருவதாக எதிரி கூறினார். எதிரியும் பத்திரம் எழுதிக் கொடுப்பதற்காக பத்திர அலுவலகத்திற்கு வந்தார். என் கணவரும் பத்திரத்தை தயார் செய்து வைத்திருந்தார். நான் கிரைய ஒப்பந்தம் தான் போட்டேன் என்றும், கிரைய பத்திரம் எழுதி தரமுடியாது என்று கூறி எதிரி சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. பணத் தகராறை தவிர எதிரிக்கும் என் கணவருக்கும் வேறு எந்த தகராறும் இல்லை. என் கணவருக்கும், அவரது சகோதரர் நடராஜனுக்கும் வரப்பு சம்மந்தமாக தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த தகராறில் நடராஜன் மருத்து வைத்து சாவடிக்காமல் விடமாட்டேன் என்று என் கணவரை மிரட்டினார் என்றால் சரியல்ல. முடியவில்லை என்றால் ஆள் வைத்து கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார் என்றால் சரியல்ல. எங்கள் நிலத்திற்கு பக்கத்தில் சிவா

ரெட்டியார் நிலம் உள்ளது. வரப்பு தகராறு காரணமாக என் கணவரும், சிவா ரெட்டியாரும் அடித்துக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. என் கணவரின் சகோதரர் ரேணு என்பவர் இறந்து விட்டார். நிலத்தகராறு சம்மந்தமாக ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு ரேணு இறந்து விட்டார் என்றால் சரியல்ல. உடம்பு சரியில்லாமல் இறந்து விட்டார். ராமச்சந்திரன் என்பவர் என் கணவருக்கு தம்பி முறை. அந்த ராமச்சந்திரனிடம் இருந்து என் கணவர் நிலத்தை மேசடியாக எழுதி வாங்கிக் கொண்டார் என்றால் சரியல்ல. என் கணவருக்கு நிறைய விரோதிகள் இருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதன் காரணமாக யார் என் கணவரை சாகடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் மணியக்கார் காவல் நிலையத்திற்கு வந்திருந்த போது பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. போலீசார் உண்மையான குற்றவாளியை கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எங்களுக்கும் எதிரிக்கும் முன் விரோதம் இருந்த காரணமாக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் என் கணவரின் இறப்பிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- அமுதா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.